மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த தூரம் இவைகளையெல்லாம் கணக்குப் போட்டுத்தான் சொல்ல வேண்டும். அவர்கள் சொல்கிறபடி குறைவான தூரமாக இருந்தால் அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 157,158 மற்றும் 159 ஆகியவை அமைச்சருடையவேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.
வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினை

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், தமிழகத்தில் ஆர். எஸ். எஸ். பயிற்சி நடத்தக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருக்கிறதே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பயிற்சிகளைப் பற்றியெல்லாம் முறைப்படி அவையில் கொண்டு வர வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டரில் அதுபற்றியெல்லாம் கேட்கக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : சபாநாயகருடைய கவனத்தை நேரிடையாக ஈர்க்கும் பொருட்டுத்தான், நான் அதை இங்கு எழுப்பினேன்.

மாண்புமிகு பேவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்னைகளுக்கு எப்படி சபாநாயகருடைய கவனத்தைக் கவர்வது என்பதற்கு விதிகள் உள்ளன, புத்தகத்தை படியுங்கள். அதைப் படித்த பின்னர் கவரலாம் திடீர் திடீர் என்று கவரக் கூடாது.

(ஆ) வினாக்களுக்கான விடைகள்

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களால் கேட்கப்பட்ட வினாக்கள் எல்லாம், கேட்கப்பட்ட 49 நாட்களுக்குள் லிஸ்டிலே வரவேண்டும் என்கிற விதி இருக்கிறதே. ஆனால் நான் கேட்டு 42 மாதங்கள் ஆகி விட்டது. இதுவரையில் பதில் இல்லை. ஆகவே அந்த பதில்களை வாங்கிக் கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.